

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் பொற்குணம் கிராமத்தில் புதிய தார்ச் சாலை அமைப்பதற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய்நாராயணன், ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன்,ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்ரமணியன் உள்ளனர்.



திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீடாமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி, விரிவான ஆய்வு மேற்கொண்டபோது அங்கு நடைபெற்ற காலாண்டு தேர்வு மையத்தை பார்வையிட்டார்.

### 5வது மண்டல இளைஞர் அணி

# அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் ஆய்வுக் கூட்டம்!

## மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை!

ஈரோடு, செப். 26 -

ஈரோடு மாவட்ட பெருந்துறை அருகில் உள்ள ஈங்கூர், மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் மண்டலம் 5க்கு உட்பட்ட கரூர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர் நீலகிரி மற்றும் மண்டலம் 4ல் உள்ள ஈரோடு தெற்கு மற்றும் ஈரோடு வடக்கு மாவட்டம், மாநகரங்கள் (கரூர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, ஈரோடு) மாவட்டங்களின் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் கலந்துரையாடல் ஆய்வுக் கூட்டம் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே, அதுசமயம் மாவட்ட,மாநகர அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் இளைஞர் அணி கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

**பொருள்**: 1. கலைஞர் படிப்பகம் அமைக்காத சட்டமன்ற தொகுதிகளில் உடனடியாக கலைஞர் படிப்பகம் அமைக்க ஏற்பாடு செய்தல்.

2. இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல்.

3.இளைஞர் அணி ஆக்கப்பணிகள்.

**பேச்சுப் போட்டி பயிற்சிக் கூடம்!**

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகில் உள்ள ஈங்கூர், மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் மண்டலம் 5க்கு உட்பட்ட கரூர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர் நீலகிரி மற்றும் மண்டலம் 4ல் உள்ள ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு மாவட்டம், மாநகரங்கள் (கரூர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, ஈரோடு ஆகிய பகுதிகளில் உள்ள, தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்டவர்களை 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி அளவில் பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு நடைபெற உள்ள பேச்சுப்போட்டி பயிற்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சி சென்னிமலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன் தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மேல்மலையனூர் ஒன்றியத்தில்

# 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலைகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணிகளை தொடங்கி வைத்தார்!

செஞ்சி, செப். 26 -

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தாதி குளத்தில் இருந்து பொற்குணம் வழியாக சித்தாத்தூர் கடலி செல்லும் சாலையைபிரதம மந்திரி கிராமசடக் யோஜனா திட்டத்தின் கீழ் 3 கோடியே 52 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சாலையை தரம் உயர்த்தி புதிய தார் சாலை அமைப்பதற்கும் ஈய குணம் முதல் தாதம் பட்டி செல்லும் சாலையைப முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 97 லட்சத்தி 95 ஆயிரம்ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு பொற்குணம் மற்றும் தாதம்பட்டியில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், தலைமை தாங்கினார். மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் கடலி பெருமாள், துறிஞ்சம்பூண்டி சேட்டு, ஈய குணம்சரோஜா அன்பு ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்,

நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பொற்குணம் , மற்றும் தாதம்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 4 கோடியே 50 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலைகள் அமைப்பதற்கு பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்டஊராட்சிகளின் செயற்பொறியாளர் ராஜா,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவசண்முகம், சையத் முகமது, மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன்,ஒன்றிய கவுன்சிலர்கள் முரளி, ரவிச்சந்திரன், ஒன்றிய பொறியாளர்கள் நாராயணமூர்த்தி, தண்டபாணி, ஊராட்சி மன்ற தலைவர் கள்லாவண்யா ராஜேஷ் , விஜயலட்சுமி ஜெயக்குமார், கடலிஊராட்சி மன்ற துணைத் தலைவர் மொபினா யூசப், நிர்வாகிகள் சரவணன், எஸ்.பி. சம்பத், மணிகண்டன்,நிர்மல் குமார்,ஊராட்சி நிர்வாகிகள் ராமச்சந்திரன், ஏழுமலை, பன்னீர், சீனிவாசன், பெருமாள்உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

### நாகை மீனவ கிராமங்களில் இருந்து

# தமிழக வெற்றிக் கழகம் - அ.தி.மு.க.வினர் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## என்.கௌதமன் முன்னிலையில்! இரா.மாரிமுத்து – மகா.குமார் – எம்.ஆர்.செந்தில்குமார் பங்கேற்பு!

நாகை, செப். 26 -

நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை மற்றும் நம்பியார் நகர் மீனவ கிராமங்களில் இருந்து அ.தி.மு.க. மற்றும் வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த 50 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் விழா நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து தலைமை தாங்கினார்.

நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் எஸ்.என். மோகன்தாஸ் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மீனவ கிராமங்களான அக்கரைப் பேட்டை யில் இருந்து வெற்றிக் கழக பொருப்பாளர்கள் எல்லையப்பன், ஆனந்த், சேவாபாரதி பகுதியின் இளைஞர் அணி கோபிநாத், கீச்சாங்குப்பம் அ.தி.மு.க.வை சேர்ந்த விஜய் ஆகியோர் தலைமையில் வெற்றிக் கழகம் மற்றும் அ.தி.மு.க.வை சேர்ந்த 50 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இருவண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு கழகத்தில் இணைத்து கொள்ளப்பட்டது. நிகழ்ச்சியில்மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, இந்த சமய அறநிலையத் துறை மாவட்ட அறங்காவலர் நாகரெத்தினம், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பாலமுரளி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கமல், நகர் மன்ற உறுப்பனர்கள் ஞானமணி, கமல்நாதன், மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் சுந்தரவடிவேல், குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி தலைமை!

# வேலூரில் மாணவர்களுக்கான உயர்வுக்குப்படி திட்டம்!

## ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

வேலூர், செப். 26 -

நன்றாகப் படித்தால் வாழ்வில் வெற்றி பெறலாம் என்று மாணவர்களுக்கான உயர்வுக்குப்படி திட்டத்தின்சிறப்பு முகாமில் மாவட்ட ஆட்சியர் வே. இரா.சுப்புலட்சுமி தெரிவித்தார். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் சார்பில் ,"நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் 2023 - 2024 ம்கல்வி ஆண்டில் கல்லூரியில் சேர விண்ண ப்பிக்காத +2 வகுப்பு தேர்ச்சி பெறாவர்கள் தேர்வு எழுதாத இடைநின்ற மற்றும் தேர்வு எழுதி தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு தகுந்த உயர்கல்வி வழங்கப் படுகிறது. இதையொட்டி மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கிய திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் உயர்வுக்குப்படி என்ற திட்டத்தின் சிறப்பு முகாம் வேலூரில் நடந்தது.

மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி தலைமை தாங்கினார்.

மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர் மாணவ - மாணவிகளுக்கு கல்லூரியில் சேர்க்கைக்கான ஆணையினை ஆட்சியர் சுப்புலட்சுமி வழங்கி பேசினார்.

அவர் பேசியதாவது: உயர்வுக்குப்படி என்ற திட்டமானது தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பு திட்டமாகும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ - மாணவிகளின் உயர்கல்வியை உறுதிப்படுத்துவதற்காக இத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அரசு பள்ளியில் பயிலும் மாணவ - மாணவிகள் அனைவரும் தங்களது வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும். ஒரு மாணவன் பத்தாம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்புடன் தன்னுடைய படிப்பை நிறுத்தி விடாமல் உயர் கல்வி பயில வேண்டும். பள்ளி படிப்பை முடித்து மேற்படிப்பு தொடராத மாணவ - மாணவிகளை கண்டறிந்து அவர்களை இது போன்று உயர்வுக்குப்படி முகாம்களுக்கு அழைத்து வந்து மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் எந்தெந்த பாடத்திட்டங்களில் காலியான இடங்கள் உள்ளது என்பது குறித்து அவர்களுக்கு எடுத்துரைத்து அதில் ஏதேனும் ஒரு பாடத்திட்டத்தில் அவர்களை இணைத்து உயர்கல்வி படிக்க வைப்பது இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

உயர் கல்வி பயிலும் போது அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்படுகிறது குறிப்பாக அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய், அரசு பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் உதவி தொகை வழங்கப்படுகிறது. நன்றாக படித்தால் வாழ்வில் வெற்றி பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் இணை இயக்குனர் (கல்லூரி கல்வி) மலர்,வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணி , முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமானது!

# 3 குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜரான வழக்கு: ஒன்றிய அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, செப். 26 -

3 குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு தொடர்ந்துள்ள வழக்கில் ஒன்றிய அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒன்றிய பா.ஜ.க., அரசின் 3 புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் மாரப்பன் சார்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த சட்டங்களுக்கு இந்தியில் மட்டும் பெயர் வைத்ததன் மூலம் தமிழர்கள் மீது இந்தி திணிக்கப்பட்டுள்ளது என்றும், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட் டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் சட்டத்தை கொண்டு வந்துள்ளதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எந்த ஒரு விவாதமும், கலந்தாலோசனையும் இல்லாமல் தன்னிச்சையாக இந்த சட்டங்களை அமல் படுத்தியுள்ளதாகவும், அரசியலமைப்பு நடைமுறைகளை மீறி கொண்டு வரப்பட்டுள்ள இந்த சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் அல்லது நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் மற்றும் நீதிபதி ஜோதிராமன் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜராகி அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமாக இந்த சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக வாதிட்டார். இதனையடுத்து, இந்த வழக்கில் ஒன்றிய அரசு பதிலளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், ஏற்கனவே தொடரப்பட்டுள்ள வழக்குகளோடு இந்த வழக்கையும் சேர்த்து பட்டியலிட உத்தரவிட்டனர்.

3 புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு வழக்கு இந்த சட்டங்களுக்கு இந்தியில் மட்டும் பெயர் வைத்ததன் மூலம் தமிழர்கள் மீது இந்தி திணிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது எந்த ஒரு விவாதமும், கலந்தாலோசனையும் இல்லாமல் ஒன்றிய அரசு தன்னிச்சையாக இந்த சட்டங்களை அமல்படுத்தியுள்ளது என்று மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வாதிட்டார்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் ஆங்கூர்ராவுத்தர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் கம்பம் முத்தையாபிள்ளை நினைவு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் கம்பம் வடக்கு நகரச் செயலாளர் வீரபாண்டியன், தெற்கு நகரச் செயலாளர் பால்பாண்டிராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குருகுமரன், வடக்கு தெற்கு நகர வார்டு செயலாளர்கள், நகர வார்டு நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்!

மாவட்ட செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தி.மு.க. பவள விழாவை முன்னிட்டு 28.09.2024 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார். அது சமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முந்நாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியகுழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முந்நாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.




இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட பாம்பனைச் சேர்ந்த 32 மீனவர்களின் குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து ஒவ்வொருவருக்கும் வாழ்வாதாரத்திற்காக தனது சொந்த நிதியினை அளித்தார். உடன் மீனவர் அணி அமைப்பினர், ராமேஸ்வரம் நகர் மன்றத் தலைவர் நாசர்கான் உட்பட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.